இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 29.01.2026

# அந்தப் பெண் இறந்தது தெரியுமா பிரதமரே?

பெண்கள் மீதான வன்முறை தமிழ்நாட்டில் அதிகம் நடப்பதைப் போல ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்க பா.ஜ.க. - அ.தி.மு.க. அணி நினைக்கிறது. அதனைத்தான் தனது உரையிலும் பிரதமர் மோடி சொல்லிச் சென்றுள்ளார். அவர் இந்தியாவுக்கே பிரதமர். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எங்கே, எந்த மாநிலத்தில் அதிகம் நடக்கிறது என்று கேட்டால் மறுநொடியே அவரது மேசைக்கு புள்ளிவிபரங்கள் கொண்டு வந்து கொட்டப்பட்டு விடும். அதன் பிறகு அவரால் வாயைத் திறந்து பேச முடியாது.

**2014ஆம் ஆண்டு பிரதமர் மோடி ஆற்றிய முதலாவது சுதந்திர தின உரையின்போது, ”பாலியல் வல்லுறவுகளைப் பற்றி கேள்விப்படும்போது வெட்கத்தால் தலைகுனிய வேண்டியுள்ளது” என்று கூறி இந்தியாவில் நடைபெறும் பாலியல் வல்லுறவுகளை கண்டித்தார். ஆனால் அவரது 11 ஆண்டு கால ஆட்சியில் இவை குறைந்துள்ளதா? அவர் தலைகுனிய மாட்டார். இந்தியா தலைகுனியும் நிலைமையில்தான் புள்ளிவிபரங்கள் இருக்கின்றன.**

2022 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் தேசிய குற்றப்பதிவு அறிக்கை வெளியானது. இந்தியா முழுமைக்கும் 31 ஆயிரத்து 516 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவாகி உள்ளன. இதில் முதலாவது இடத்தில் இருப்பது ராஜஸ்தான். முழுமையான பட்டியலைப் பாருங்கள்...

**1. ராஜஸ்தான் - 5.399 பாலியல் வன்கொடுமை வழக்குகள்**

**2. உத்தரப்பிரதேசம் - 3,690**

**3. மத்தியப் பிரதேசம் -3,029**

**4. மகாராஷ்டிரா - 2,904**

**5. அரியானா - 1.787**

**6. ஒடிசா -1,464**

**7. ஜார்கண்ட் -1,298**

**8. சட்டீஸ்கர் -1,246**

**9. டெல்லி -1,212**

**10. அசாம் - 1,113**

- பாலியல் வன்கொடுமை வழக்குகள் அதிகம் பதிவான முதல் பத்து மாநிலங்களின் பட்டியல் இது. இந்த மாநிலங்களை ஆளும் மாநில அரசுகள் யார் என்பதை வரைபடம் பார்த்து பிரதமர் மோடிதான் சொல்ல வேண்டும். இந்தப் பட்டியலில் தமிழ்நாடு 20 ஆவது இடத்தில்தான் இருக்கிறது. இது ஒன்றிய அரசின் பட்டியல்தான்.

**இந்தியாவில் 2023 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகம் நடக்கும் மாநிலங்களில் முதலாவது இடத்தில் இருப்பது பா.ஜ.க.வின் யோகி ஆளும் உத்தரப்பிரதேசம். தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கை இந்த தகவலை வெளியிட்டுள்ளது. 2023- ஆம் ஆண்டில் மொத்தம் 4,48,211 பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பதிவாகியுள்ளன. இது 2022 ஆம் ஆண்டில் 4,45,256 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 4,28,278 ஆகவும் இருந்தது.**

மாநிலங்கள் வாரியாகப் பார்த்தால் உத்தரப்பிரதேசம் அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை பதிவு செய்துள்ளது. அங்கு 66,381 வழக்குகள் பதிவாகியுள்ளன. இதற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரா 47,101 வழக்குகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. ராஜஸ்தான் 45,450 வழக்குகளையும், மேற்கு வங்கம் 34,691 வழக்குகளையும், மத்தியப் பிரதேசம் 32,342 வழக்குகளையும் பதிவு செய்துள்ளது.

**2023 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் படி பெண்களுக்கு எதிரான குற்றவிகிதம் (ஒரு லட்சம் பெண்களுக்கு) குறைவாக உள்ள முதல் ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடு நான்காவதாக இருக்கிறது. இவை அனைத்தும் பிரதமர் அறிந்த புள்ளிவிபரங்கள்தான்.**

**பில்கிஸ் பானு வழக்கில் 14 பேரைக் கொன்று, 7 பேரைச் சீரழித்த குற்றவாளிகளை விடுதலை செய்து, அவர்களுக்கு மாலை போட்டு வரவேற்றது ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. கூட்டம். இந்தக் கொடுமைக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்?**

இவை அனைத்துக்கும் மேலாக ஒரு வாரத்துக்கு முன்னால் ஒரு மாபெரும் சோகம் நடந்துள்ளது. பா.ஜ.க.வின் இரட்டை இஞ்சின் ஆட்சி நடக்கும் மணிப்பூரில் கூட்டுப் பாலியல் வன்முறைக்கு ஆளான பெண், தனக்கு நீதி கிடைக்கும் முன் மரணம் அடைந்துவிட்டார்.

2023 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் மணிப்பூரில் நான்கு பேரால் அந்தப் பெண் கடத்தப்பட்டார். ஒரு காரில் இழுத்துச் செல்லப்பட்டார். வேறு ஒரு ஊரில் பல ஆண்களால் தாக்கப்பட்டார். துப்பாக்கி ஏந்திய சிலரால் அங்கிருந்து மீண்டும் கடத்தப்பட்டார். மலை உச்சி போன்ற இடத்தில் மூன்று பேரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டார். அவரைக் கொன்று விடலாமா, அல்லது விட்டு விட்டுப் போகலாமா என்று அந்த மூவரும் வாக்குவாதம் செய்தார்கள். அப்போது வண்டியை ஓட்டியவர் கோபமாக வாகனத்தை ஓட்டி வந்து அந்தப் பெண்ணை இடித்தார். மலை உச்சியில் இருந்து அந்தப் பெண் விழுந்தார்.

அந்தப் பெண் விழுந்து கிடந்த இடத்தின் வழியாக வந்த ஒரு ஆட்டோ ஓட்டுநரால் அவர் காப்பாற்றப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மணிப்பூரில் இருந்து நாகலாந்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த சம்பவம் நடந்து பல மாதங்களுக்கு பிறகு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது.

2026 ஜனவரி வரைக்கும் சி.பி.ஐ. எதுவும் செய்யவில்லை. இதுவரை யாரையும் கைது செய்யவில்லை சி.பி.ஐ. வெறும் எஃப்.ஐ.ஆர். மட்டுமே பதிவு செய்யப்பட்டது. ஆனால் கடந்த வாரம் - 16 ஆம் தேதியன்று அந்தப் பெண் இறந்தே போனார். சூரசந்த்பூரில் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது அந்தப் பெண்ணுக்காக!

‘இவளுக்கு இதைச் செய்தவர்களை எப்போது தண்டிப்பீர்கள்?’ என்று கேட்கிறார் அந்தப் பெண்ணின் தாய். பதில் உண்டா பிரதமரிடம்?

‘கடந்த இரண்டு ஆண்டுகளாக என் மகள் பயத்தில்தான் வாழ்ந்தாள். இனிமேல் வாழ விருப்பமில்லை என்று சொல்லிக் கொண்டே இருந்தாள். கனவுகள் வந்து கொண்டே இருந்தது. தூங்க முடியாமல் தவித்தாள். அவள் மனநிலையே அவள் உடலை மோசமாக்கியது’ என்கிறார் அந்தப் பெண்ணின் தாய். அந்த தாய்க்கு பதில் சொல்ல வேண்டிய கடமை பிரதமருக்குத் தானே இருக்கிறது?

**தேர்தல் ஆதாயத்துக்காக பொய்த் தகவல்களைப் பரப்பும் பிரதமர், இந்த உண்மைத் தாய்க்கு பதில் சொல்லாமல் பதுங்கலாமா? அல்லது பெண்கள் பாதுகாப்பு பற்றிப் பேசும் தகுதிதான் அவருக்கு இருக்கிறதா?**

## கழகம் வளர்வதற்கு இந்த வட்டாரத்தில் காரணகர்த்தாக்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் பாலகிருஷ்ணன்!

# நட்பின் அடையாளமாக விளங்குபவர் பரணிகுமார்!

## திருச்சியில் இல்ல மணவிழாவை நடத்திவைத்து தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



திருச்சியில் பாலகிருஷ்ணன் – பரணிகுமார் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து மணமக்கள் ஆதித்யா பாலா பரணிகுமார் – எம்.மீனாட்சி ஆகியோரை வாழ்த்தி கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

**திருச்சி, ஜன.29-**

**திருச்சியில் பாலகிருஷ்ணன் - பரணிகுமார் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து மணமக்கள் ஆதித்யா பாலா பரணிகுமார் - எம்.மீனாட்சி ஆகியோரை வாழ்த்தி கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், “இந்த வட்டாரத்தில் கழகம் வளர்வதற்கு, காரணகர்த்தாக்களில் ஒருவராக விளங்கியவர் பாலகிருஷ்ணன் என்றும் நட்பின் அடையாளமாக விளங்குபவர் பரணிகுமார் என்றும்” புகழாரம் சூட்டினார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.01.2026) திருச்சியில் நடைபெற்ற மறைந்த கழக முன்னோடி பாலகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பரணிகுமார் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

நினைவில் வாழும் நம்முடைய பாலகிருஷ்ணன் அவர்களின் குடும்பத்தில் நடைபெறும் மணவிழா இது. இந்தப் பகுதியில், திராவிட முன்னேற்றக் கழகம் வளர்வதற்கு நம்முடைய இருவண்ணக் கொடி இந்த வட்டாரத்தில் பறப்பதற்கு, காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்தவர் நம்முடைய அருமைப் பெரியவர் பாலகிருஷ்ணன் அவர்கள். அவர் இன்றைக்கு இல்லை என்று சொன்னாலும், அவருடைய அருமை மகனாக இருக்கும் நம்முடைய பரணிகுமார் அவர்கள், அவர் விட்டுச் சென்றிருக்கும் பணிகளை எல்லாம் எந்த அளவிற்கு இந்த இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியிருக்கிறார் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

### பாலகிருஷ்ணன் இந்த பகுதி மக்களுக்கு ஆற்றிய தொண்டு!

பாலகிருஷ்ணன் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னால், அண்ணாவோடு தலைவர் கலைஞர் அவர்களோடு நம்முடைய பொதுச் செயலாளராக இருந்து மறைந்த பேராசிரியர் அவர்களோடு, அதேபோல, அன்பிலாரோடு எவ்வாறு நெருக்கமாக இருந்தார் என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அவர் மாவட்டக் கழகத்தின் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்சியில் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார். கழகத்தின் சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினராகவும் இருந்து, தன்னுடைய கடமையை நிறைவேற்றி இருக்கிறார். திருச்சியில் நகராட்சி மன்றத் தலைவராகப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று, அவர் இந்த வட்டாரத்தில் இந்த நகராட்சிக்கு திருச்சி மாநகரத்திற்கு பொதுமக்களுக்கு எப்படி எல்லாம் பணியாற்றியிருக்கிறார்; கட்சிக்கு எப்படி எல்லாம் தொண்டாற்றியிருக்கிறார் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

எனவே, அப்பாவிற்குத் தப்பாத பிள்ளையாக நம்முடைய பரணிகுமார் அவர்கள் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். பரணிகுமார் அவர்கள், முதலில் மாணவர் அணியில் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். அதைத் தொடர்ந்து, இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து கடமையை நிறைவேற்றி இருக்கிறார். தேர்தல் வேலையை எப்படி எல்லாம் ஆற்றியிருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும்.

### எனது சுற்றுப்பயணங்களில் பயணித்த பரணிகுமார்!

நான் பரணிகுமார் அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் என்னோடு சுற்றுப்பயணத்தில் ஈடுபடும்போதெல்லாம், திருச்சிக்கு மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் இருக்கும் அனைத்து மாவட்டங்களுக்கும் அவர் சுற்றுப்பயணத்தில் என்னோடு கலந்து கொண்டிருக்கிறார். மறைந்த என்னுடைய ஆருயிர் நண்பன் பொய்யாமொழி அவர்களும், நம்முடைய பரணிகுமார் அவர்களும்தான் எனக்குத் துணையாகச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளுக்குத் தொடர்ந்து வருவார்கள்.

சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு மட்டுமல்ல; என்னுடைய காரையே அவர்தான் ஓட்டி வருவார். காண்டசா கார். அவருடைய அப்பாவின் காரை எடுத்துக் கொண்டு வந்துவிடுவார். அந்தக் காரில்தான், நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தை நடத்தியிருக்கிறேன். அவருடன் பயணம் செய்தபோது, எந்தவித அச்சமும் இல்லாமல் நாம் பயணம் செய்ய முடியும். இரவிலே விழித்துக் கொண்டிருப்பார். ஆனால், பகல் எல்லாம் தூங்குவார். அது அனைவருக்கும் தெரியும். அதையும் நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கு வந்திருக்கும் அசோகனுக்கும் நன்றாகத் தெரியும். ஏனென்றால், நாங்கள் எல்லாம் அப்போது ஒரு செட். இளைஞர் அணி தொடங்கிய நேரத்தில், அப்போது தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் நடத்துகிற நேரத்தில், அவர்தான் கார் ஓட்டிக் கொண்டு வருவார்.

### மறக்க முடியாத சுற்றுப் பயணங்கள்!

அதுமட்டுமல்ல, சுற்றுப்பயணம் நடத்துகிறபோது பல நேரங்களில், நாங்கள் இரண்டு மணி, மூன்று மணிக்குத்தான் வந்து தூங்குவது உண்டு. அவ்வாறு தூங்குகிற நேரத்தில், மறுநாள் காலை 7 மணிக்குச் செல்ல வேண்டும் என்று நிகழ்ச்சி இருக்கும். அதனால் 7 மணிக்கு எழுப்பிவிடு என்று சொல்லிவிட்டு தூங்குவோம். ஆனால், அவரை யாரும் எழுப்ப முடியாது. நான்தான் அவரை எழுப்ப வேண்டும். அவர் வந்து எழுப்பமாட்டார். அப்படித்தான் எங்களது பயணம் நடந்திருக்கிறது. எனவே, அந்தப் பயணங்களை எல்லாம் மறக்க முடியாது.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்த அளவிற்கு நட்புடன் இருந்து பழகியவர்கள். திருச்சிக்கு வரும் போதெல்லாம், பரணிகுமார் வீட்டிற்குச் செல்லாமல் இருந்ததில்லை. எனவே, அந்த அளவிற்குப் பாசத்தோடு பழகும் குடும்பம். எனவே, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நம்முடைய மணமக்கள் அனைத்து நன்மைகளையும் பெற்றுச் சிறப்போடு வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்படிப்பட்ட நேரத்தில் வந்திருக்கிறோம் என்பது உங்களுக்கு தெரியும். தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு மாதங்களில் தேர்தல் நிச்சயமாக வரப்போகிறது. இதற்கிடையில் நான் உங்களை எல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன் என்று சொன்னால், அந்தக் குடும்பத்தின் மீது நாங்கள் கொண்டிருக்கும் பாசத்தின் காரணமாகத்தான் வந்திருக்கிறோமே தவிர, வேறு அல்ல.

### திருச்சியில் அடுத்து நேரு நடத்தும் மாநாடு!

ஏற்கனவே. இரண்டு நாட்களுக்கு முன்னர்தான், திருச்சிக்கு வந்து தஞ்சைக்குச் சென்று ஒரு மாநாட்டை நடத்தினோம். அதுவும் உங்களுக்குத் தெரியும். அது மட்டுமல்ல, மகளிர் அணி மாநாடு ஒரு பக்கம்; இளைஞர் அணி மாநாடு ஒரு பக்கம். அடுத்து, நிறைவாக தேர்தலுக்கு முன்பு, இதே திருச்சியில் 10 லட்சம் பேர் திரளும் அளவிற்கு ஒரு மிகப்பெரிய மாநாட்டை, நம்முடைய நேரு அவர்கள் நடத்த இருக்கிறார். அதுவும் உங்களுக்குத் தெரியும். அதையும் அறிவித்திருக்கிறோம்.

எனவே, இப்போது தொடர்ந்து பிஸியாக இருக்கும் நேரம். அவ்வாறு பிசியாக இருக்கும் நேரத்திலும் வந்திருக்கிறோம் என்றால், நம்முடைய பரணிகுமார் மீது பாலகிருஷ்ணன் குடும்பத்தின் மீது, நாங்கள் வைத்திருக்கும் பற்றின் காரணமாகத்தான் அந்த நட்பின் காரணமாகத்தான் வந்திருக்கிறோம்.

அந்த நட்பின் அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கும், பரணிகுமார் அவர்களின் இல்லத்தில் இருக்கும் மணமக்கள், அனைத்து நன்மைகளும் பெற்று, சிறப்போடு வாழ வேண்டும். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” மணமக்கள் வாழுங்கள்... வாழுங்கள்... வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு சுற்றுப்பயண விவரம் (27.01.2026)





சென்னை, ஜன.29-

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினர் கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில் தமிழ்நாடு முழுக்க சுற்றுப் பயணம் செய்து மக்களின் பரிந்துரைகளையும், கோரிக்கைகளையும் பெற்று வருகின்றனர்.

கடந்த 19.01.2026 அன்று தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான கருத்துக் கேட்பு கூட்டம் ஓசூரில் நடைபெற்ற நிலையில், நேற்று முன்தினம் (27.01.2026) டெல்டா மாவட்டங்களுக்கான கருத்துக் கேட்பு கூட்டம் காலையில் தஞ்சாவூரிலும், மாலை திருச்சியிலும் நடைபெற்றது.

தஞ்சையில் நடந்த கூட்டத்தில் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து விவசாய சங்கங்கள், தொழிற்சங்கங்கள், மீனவ சங்கங்கள், சிறு, குறு தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு, சாம்பர் ஆப் காமர்ஸ் உள்ளிட்ட 75 க்கும் மேற்பட்ட சங்கங்கள் பங்கேற்று 300க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை அளித்தனர்.

திருச்சியில் நடந்த கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட சங்கங்கள் கலந்துகொண்டு அவர்களின் கோரிக்கைகளை வழங்கினர். இக்கூட்டங்களில் பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு அவர் களது பரிந்துரைகளை வழங்கி வருகின்றனர்.

பரிந்துரைகள் பெறத் தொடங்கி 24 நாட்களில் இதுவரை தொலைபேசி, வாட்ஸப், மின்னஞ்சல் மற்றும் AI வழியாக 59,486 பரிந்துரைகளும், கோரிக்கைகளும் பெறப்பட்டுள்ளன.

வரும் ஜனவரி 30ஆம் தேதியன்று இக்குழுவினர் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்பினரை சந்திக்கவுள்ளனர்.